[Mr. Speaker] [26th April 1962

Speaker. I have returned the summons to the Magistrate so that he may make his own arrangements for the service of the summons. I hope the Government would draw the attention of the Magistrate to the orders issued in G.O. Ms. No. 1600, Home, dated 15th May 1953, Home Department Memo. No. 33469 Cts. II/56-4, dated 4th May 1956 and G.O. Ms. No. 1959, Home, dated 12th July 1958, which clearly state that the Presiding Officers or the Legislature Secretariat, should not be used for the purpose of serving summons on the Members.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I shall draw the attention of the High Court once again in this matter.

(2) EXPUNCTION OF OBJECTIONABLE REMARKS.

MR. SPEAKER : I have to make another announcement. Yesterday while taking part in the debate on the Motion of Thanks, the hon. Member Sri Rajaram made certain observations individually against the hon. Member Sri M. Karunanithi. I find those words are not dignified. Under Rule 255 of the Assembly Rules, I expunge the objectionable portion. In this connection I have to request hon. Members to be moderate in their language and not cast aspersions against other hon. Members and they must use only parliamentary language.

III.—GOVERNMENT BILLS.

THE MADRAS SUGAR FACTORIES CONTROL (AMENDMENT) BILL, 1962.

THE HON. SRI P. KAKKAN : Sir, I move—

"That the Madras Sugar Factories Control (Amendment) Bill, 1962 (L.A. Bill No. 1 of 1962) be taken into consideration."

Under section 14 (1) of the Madras Sugar Factories Control Bill, 1949, the levy of a cess, not exceeding annas four per standard maund, on sugarcane was authorized. At present a cess of Rs. 2 per ton is levied on sugarcane, brought into any factory in the State. In December 1960, the Supreme Court held, that the UttarPradesh Sugarcane Act, 1956, was invalid on the ground, that the State Government had no jurisdiction for passing such legislation. As the Supreme Court decided that the term 'local area' is to be construed only to mean the jurisdiction of a local authority and, not the premises of a factory, this Government examined the legal position and were advised that section 14 of the State Act should be amended so as to authorize the levy of a cess on sugarcane entering into any *local* area specified in such notification and note just into any areas specified in such notification. As the Legislature was not then in session, and as the matter was urgent, the Madras Sugar Factories Control Ordinance of 1962 was promulgated amending section 14 (1) of the Act. It is now proposed to replace the Ordinance by introducing this Bill. The Bill has to be passed immediately as the Ordinance will cease to operate on the expiration of six weeks from the date of the re-assembly of the Legislature. I, therefore, request the House, Sir, to accept the Motion for taking the Bill into consideration at once.

26th April 1962]

MR. SPEAKER: Motion moved—

"That the Madras Sugar Factories Control (Amendment) Bill, 1962, be taken into consideration."

SRI M. KALYANASUNDARAM: Sir, I want to move an amendment.

MR. SPEAKER: Does the hon. Member want to move an amendment at this stage?

SRI M. KALYANASUNDARAM: All right, Sir, I will not move the amendment now; I shall move it during the clause-by-clause consideration stage.

கனம் சபாநாயகர் அவர்களே, இந்தத் திருத்தமானது ஒரு அவசரச் சட்டத்தின் மூலம் கொண்டுவரப்பட்டதை நான் ஆட்சேபிக்கவில்லை. இப்போது அதை ஊர்ஜிதம் செய்வதற்குத் திருத்தச் சட்டமாக வந்திருப்பதையும் நான் ஆட்சேபிக்கவில்லை. அதிலே சில திருத்தங்கள் செய்யவேண்டுமென்று கூறுகிறேன். நமது ராஜ்யத்தில் இருக்கக்கூடிய சர்க்கரை ஆலைகளைக் கண்காணிக்கக்கூடிய முறையில், கரும்பு உற்பத்தியை அபிவிருத்தி செய்யக் கூடிய ஒரு முறையில் சட்டம் அமைந்திருக்கவேண்டும். 1949-ம் வருஷத்தில் இயற்றப்பட்ட சட்டம் இது. அப்போது இருந்த நிலைமையே வேறு. திட்டங்களைப் பற்றியே சிந்திக்காத காலம் அது. இப்போது நாம் திட்டமிட்டு உற்பத்தி பெருகவேண்டுமென்று நடவடிக்கை எடுத்து வருகிறோம். காவிரிக் கரையில் இருக்கக் கூடிய பிராந்தியம் உலகத்திலேயே கரும்பு உற்பத்தியில் முதலிடத்தில் வைக்கவேண்டிய இடங்களில் ஒன்று. ஆகவே, சர்க்கரை ஆலைகள் நம்முடைய ராஜ்யத்தில் அதிகமாகத் தோன்றிவருவது இயற்கை. தனியார் துறையிலும், கூட்டுறவுத் துறையிலும் சர்க்கரை ஆலைகள் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. நூற்பு ஆலைகளுக்கு ஒரு வேளை இடைஞ்சல் இருந்தாலும் இவைகளுக்கு இராது என்று நம்புகிறேன். தொழிலமைச்சரவர்கள் இது பற்றித் தெளிவுபடுத்தவேண்டும். இப்போது இருக்கக்கூடிய அனுபவத்தை வைத்துப் பார்த்தால் இந்தச் சட்டம் போதுமான அளவுக்கு விவசாயிகளுடைய உரிமையைப் பாதுகாக்குமா? மக்களின் உரிமையைப் பாதுகாக்கவேண்டியது மத்திய அரசாங்கத்தின் கையில் இருக்கிறது. வேறு மாகாணங்களில் உற்பத்தி ஆகக் கூடிய கரும்பு லாபகரமாக இருப்பதற்காகவேண்டி. நாமும் அதிக விலை கொடுக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். ஒரு தேசக் கொள்கை என்ற நிலையில் இந்த நிலை இருக்கத்தான் செய்யும். அதைக்கூட நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், சர்க்கரை ஆலைகளில் அதிக லாபம் சம்பாதிக்கிறார்கள். அந்த லாபத்தை ஓரளவுக்குப் பொது உபயோகத்திற்கு எடுக்கவேண்டியது அவசியம். அந்த அடிப்படையில் இந்த 'செஸ்' போடுவதை வரவேற்கிறேன். ஆனால் இந்த 'செஸ்' வரி விவசாயிகள்மீது

விழாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும் என்று அமைச்சர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஆலையில் இருந்து வசூலிக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஆனால் விலையைக் கட்டுப்படுத்துவதைப் பற்றி அரசாங்கம் கவனிப்பதில்லை. 'பர்சேஸ் டாக்ஸ்' மேலும் விதிப்பதைத் தடுக்கமுடியாமல் இருக்கிறோம். நீங்கள் இதைப் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய யோசனை என்னவென்றால், இந்தச் சட்டத்தையே ஏன் முழுமையாகப் பரிசீலனை செய்யக்கூடாது என்பதுதான். கரும்பு உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்குக் கோட்டா இருக்கிறது. ஆலை முதலாளிகள் செல்வாக்கு இருக்கக்கூடியவர்கள 20, 30 ஏக்கா என்று பதிவு செய்து கொள்கிறார்கள். அதைச் சிறு நிலச் சொந்தக்காரர்களுக்குக் கள்ளத்தனமாக விற்று லாபம் சம்பாதிக்கிறார்கள். (குறுக்கீடு) கள்ளத்தனம் என்பது நல்ல தமிழ் வார்த்தைதான். திருட்டுத்தனம் என்றும் வைத்துக் கொள்ளலாம். மறைமுகமாக, ஏமாற்றும் நோக்கத்தோடு இந்த மாதிரிச் செய்கிறார்கள் என்ற புகார்கள் வருகின்றன. கரும்பு உற்பத்தி செய்யும் பகுதியில் விவசாயிகளை வஞ்சித்து மலிவான விலைக்குக் கரும்பை வாங்கவேண்டுமென்ற நோக்கத்துடன் ரிஜிஸ்டர் செய்வதைத் தங்களுடைய தேவைக்குக் குறைவாகச் செய்து கொண்டு ரிஜிஸ்டர் செய்யாத கரும்பைக் குறைந்த விலைக்கு ஆலைச் சொந்தக்காரர்கள் வாங்குகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைத் திருத்தியமைக்கவேண்டிய ஒரு யோசனையை ஆரம்பத்திலேயே கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போதே திட்டம் போட்டால்தான் இன்னும் ஒரு வருஷம், இரண்டு வருஷத்திற்குள் இது முடியும். சர்க்கார் வருமானம் பாதிக்கும் என்ற காரணத்தால்தான் இவ்வளவு அவசரமாக இது தற்போது கொண்டுவரப்பட்டிருக்கிறது. என்னுடைய திருத்தம் ' area ' என்று இருந்தது. ஏரியா என்றால் ஒரு பிரதேசம். பஞ்சாயத்துக்கோ ஒரு ரெவின்யூ கிராமத்திற்கோ உட்பட்டுள்ள பிரதேசமாகத்தான் பல கிராமங்கள் இருக்கின்றன. அது கூடாது என்ற காரணத்தால்தான் 'Local area' என்று திருத்தவேண்டுமென்று கூறுகிறேன். அரசாங்க உத்தரவு எந்த முறையில் பிறப்பிப்பார்கள் என்பதை அறியவேண்டும். ஒரு ஆலைக்கு வேண்டிய கரும்பு ஒரே ஒரு கிராமத்தில் உற்பத்தியானதாக மட்டும் இருக்காது. ஒரு பஞ்சாயத்து எல்லைக்கு உட்பட்டதாக இருக்கும். கிராமங்களில் இருந்து உற்பத்தியாகி உள்ளே வரக்கூடிய கரும்புக்கு வரி விதிப்பது எப்படி, பாக்டரிமூலம் வசூலிக்கப்படுமா அல்லது விவசாய வண்டிகள் வரும் வழியில் 'செக் போஸ்ட்' வைத்து வசூலிக்கப்படுமா? இப்போது போடப்பட்டிருக்கும் வரி விவசாயிகளின்மீது விழாது என்பதற்கு என்ன உத்திரவாதம் இருக்கிறது என்பதையெல்லாம் மந்திரியவர்கள் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

26th April 1962]

THE HON. SRI P. KAKKAN : கனம் சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே இயற்றப்பட்டுள்ள அவசரச் சட்டத்துக்குச் சாதகமாக அங்கீகாரம் பெறும் முறையில் இதை இங்கே பிரேரித்திருக்கிறேன். கனம் அங்கத்தினர் அவர்கள் பேசிய கருத்தையும் அதிகாரிகளுடன் கலந்து பேசினேன். இப்போது வெளியே இருந்துவரக்கூடிய கரும்பிற்கு பாக்டரியில் வந்து சேர்ந்த பின்பு அங்குதான் வரி விதிக்கப்படுகிறது. 'செக் போஸ்ட்' போட்டு வரி விதிக்கப் போவதில்லை. இதனை விவசாயி களுக்குக் கெடுதல் இல்லாத முறையில் நல்ல முறையில் எப்படிச் செய்யலாம் என்பதை பின்னர் விரிவான அடிப்படையில் எடுத்துக் கொள்ள முடிவு செய்யப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : The question is—

"That the Madras Sugar Factories Control (Amendment) Bill, 1962 (L.A. Bill No. 1 of 1962), be taken into consideration."

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clause 2.

MR. SPEAKER : The question is—

"that Clause 2 do stand part of the Bill."

SRI M. KALYANASUNDARAM : Sir, I move—

"*Add* the following proviso at the end of Section 14 :—

"Provided that all notifications issued under this section shall be placed on the table of the Assembly and that the Assembly may alter, amend or rescind such notifications before the expiry of 15 sittings, after placing such notifications."

SRI A. K. SUBBIAH : I second the amendment, Sir.

SRI T. KARCHA GOWDER : Sir, I move—

"For the words 'four annas' occurring in sub-section (1) of section 14, Madras Act XX of 1949, substitute the words 'twenty-five naye Paise."

The amendment was duly seconded.

SRI M. KALYANASUNDARAM : Sir, the amendment given notice of by the hon. Member Sri T. Karcha Gowder is an amendment to the old Act. Therefore it is out of order.

MR. SPEAKER : The clause and the amendments are before the House for discussion.

* **SRI T. KARCHA GOWDER :** கனம் சபாநாயகர் அவர்களே, செக்ஷன் 14-ல் 4 அணு என்று சொல்லப்பட்டிருக்கிறது. ரூபாய் அணு, பைசா யுகத்திலிருந்து இப்பொழுது தசாம்ச நாணய யுகத்திற்கு நாம் வந்திருக்கிறோம். ஆகவே இந்த நாலு
9.00 a.m. அணு என்பதற்குப் பதிலாக 25 நயாபைசா என்று மாற்றும்படிக் கொடுக்கப்பட்டிருக்கும் இந்த அமென்ட்மென்டை பாஸ் செய்யலாமென்று கருதுகிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, எனது திருத்தத்தைப் பற்றி அதிகமாக விளக்க வேண்டிய அவசியமில்லையென்று கருதுகிறேன். 1952-ம் ஆண்டுக்குப் பிறகு இயற்றப்பட்ட எல்லாச் சட்டங்களிலும் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்படக் கூடிய விதிகள், சர்க்கார் உத்தரவுகள் எல்லாம் இந்த சபை முன்பு வைக்கப்படவேண்டும். 15 தினங்களுக்குள் திருத்தம் கொடுக்க அங்கத்தினர்களுக்கு உரிமையுண்டு. இச் சட்டங்கள் 1952-க்கு முன்பு இயற்றப்பட்டவை. அப்பேர்ப்பட்ட உரிமை இந்த சட்டங்களில் இல்லை. அதை அளிக்கவேண்டுமென்று கேட்கிறேன். இதை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு ஆட்சேபணை சொல்லலாம். ஒரு பிரிவு அல்ல, பல பிரிவுகளில் உத்தரவுகள் பிறப்பிக்கிறோம், அவை என்னவாகிறது என்று கேட்கலாம். சந்தர்ப்பம் கிடைத்தபோது இதைத் திருத்திக் கொள்ளலாம். சந்தர்ப்பம் கிடைக்கும்போது மற்றவற்றை பின்னர் திருத்திக் கொள்ளலாம்.

* **THE HON. SRI R. VENKATARAMAN :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் என்ன சொல்லப் போகிறேன் என்பதை கல்யாணசுந்தரம் அவர்கள் முன்கூட்டியே எதிர்பார்த்து சொல்லிவிட்டார்கள். 1952-ம் வருடத்திய சட்டங்களுக்குப் பிறகு எந்த நோட்டிபிக்கேஷன் பிறப்பித்தாலும் அவற்றையெல்லாம் நாம் இப்பொழுது சட்டசபைகளின் மேஜைகளின் மீது வைப்பது என்ற வழக்கத்தைக் கடைப்பிடித்து வருகிறோம். இச் சட்டம் 1949-ஆம் வருடத்திய சட்டம். ஒரு செக்ஷனுக்கு மட்டும் இத் திருத்தத்தைக் கொண்டு வந்தால் பாக்கியுள்ள செக்ஷன்களுக்கு இப்படி திருத்தம் கொண்டுவருவது நமக்கு அவசியமாகும். இந்தச் சட்டத்தைத் திருத்துவதற்குள்ள யோசனை சர்க்காருக்கு இருக்கிறது. முழுவதையுமே புனர்பரிசீலனை செய்யவேண்டுமென்ற யோசனை இன்று சர்க்காருக்கு இருக்கிறது. அப்பொழுது இந்தத் திருத்தம் எல்லா செக்ஷன்களுக்கும் அமுல் ஆகும்படியான வகையில் திருத்தப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆகவே இந்தத் திருத்தத்தை சர்க்கார் எதிர்க்கும்படியான நிலையில் இருக்கிறது.

The amendments were by leave, withdrawn.

Clause 2 was put and carried.

Clause 3 was put and carried.

Clause 1 and the Preamble were put and carried.

26th April 1962]

THE HON. SRI P. KAKKAN : Sir, I move—

"That the Madras Sugar Factories Control (Amendment) Bill, 1962 (L.A. Bill No. 1 of 1962), be passed."

MR. SPEAKER : The question is—

"That the Madras Sugar Factories Control (Amendment) Bill, 1962 (L.A. Bill No. 1 of 1962), be passed."

The motion was put and carried and the Bill was passed.

IV.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS.

MR. SPEAKER : Srimathi Rajathi Kunchithapatham will now speak.

Srimathi Rajathi Kunchithapatham rose.

Sri M. Kalyanasundaram also rose.

MR. SPEAKER : I call upon Sri M. Kalyanasundaram to speak.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I want merely to bring the notice of the Hon. Speaker that when an hon. Member has been called upon to speak, the convention is that, that hon. Member alone is allowed to proceed. Therefore, the convention may be observed.

MR. SPEAKER : I call upon Srimathi Rajathi Kunchithapatham to speak.

SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : I have no objection to the hon. Member, Sri M. Kalyanasundaram speaking.

MR. SPEAKER : The hon. Lady Member can speak now.

* SRIMATHI RAJATHI KUNCHITHAPATHAM : கனம் சபாநாயகர் அவர்களே, கவர்னர் பெருமான் அவர்கள் ஆற்றிய உரைக்கு நன்றி தெரிவிக்கும் இத் தீர்மானத்தை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். கவர்னர் அவர்களது உரையிலே, விளக்கமாக இப்பொழுது நடந்த பொதுத் தேர்தலைப் பற்றியும், இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களைப் பற்றியும், நாட்டிலே நாம் அடைந்திருக்கக்கூடிய விவசாய முன்னேற்றத்தைப் பற்றியும், மின்சாரம், தனியார்துறை தொழில் அபிவிருத்தி, பொதுத்துறை தொழில் அபிவிருத்தி போன்ற பல்வேறு விஷயங்களைப் பற்றி விவரமாக எடுத்துக் கூறியுள்ளார்கள். திட்டங்களைபற்றி சொல்லும் போது, விவசாயத் துறையில் நாம் கணிசமானதொரு முன்னேற்றத்தை அடைந்திருக்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாவது திட்டத்தில் 9 லட்சம் டன் அதிகமாக நாம் உணவு உற்பத்தி செய்திருக்கிறோம். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நாம் இன்னும் அதிகமாக 16 லட்சம் டன் உணவு உற்பத்தி செய்ய வேண்டும். அதோடு திட்டங்களின் வெற்றிக்கு பொதுமக்களின்